# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2007/39 - 2017 පෙබරවාරි මස 23 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.02.23

*2007/39 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 24/51* (XII)

**(2003 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டம்**

*(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 158 (2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

நிமல் சிறிபால டி சில்வா,
போக்குவரத்து மற்றும் சிவில்
விமான சேவைகள் அமைச்சர்.

கொழும்பு,
*2017*, பெப்புருவரி *21*.

**ஒழுங்குவிதிகள்**

*1.* இவ் ஒழுங்குவிதிகள் 2017 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, மோட்டார் வாகன (பாதுகாப்பான தலைக்கவசங்கள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2.* மோட்டார் சைக்கிளொன்றை ஓடுகின்ற அல்லது மோட்டார் சைக்கிள் ஒன்றில் ஏற்றிச் செல்லப்படுகின்ற ஆள் ஒவ்வொருவரும் எல்லா நேரங்களிலும் பாதுகாப்பான தலைக்கசவம் ஒன்றை அணிதல் வேண்டும்.

*3.* பாதுகாப்பான தலைக்கவசம் -

(அ) அணிபவரின் தலைக்கு அளவானதாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) நாடிப்பட்டியுடன் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(இ) சுற்றுப்புறப் பார்வைக்கு முட்டுக்கட்டையாக இராத வகையில் முகத்தை காட்டி நிழற்சாயமிடப்பட்ட அல்லது நிழற்பூச்சிடப்பட்ட மூலப்பொருள் ஒன்றினால் ஆக்கப்படாத கவசமுகத்தகடு ஒன்றுடன் பொருத்தப்படுதல் வேண்டும்.

*4.* பாதுகாப்பான தலைக்கவசம் ஒன்றை அணியும் போது, அதன் பாகம், நீட்சி, அல்லது இணைப்பு எதுவும் அணிபவரின் முகத்தின் ஏதேனும் பாகத்தை தெளிவற்றதாக வைத்தலோ, மறைந்து வைத்தலோ அல்லது உருமாற்றுதலோ ஆகாது.

5. பாதுகாப்பான தலைக்கவசமும் நாடிப்பட்டியும் அவற்றை சுற்றி கூரான விளிம்புகள், கூரான இடங்கள், பொருத்துகள், ஆணிகள் அல்லது செருகூசி எவையும் இன்றி, ஒரே ஒரு அலகில் இருத்தல் வேண்டும்.

6. பாதுகாப்பான தலைக்கவசத்தின் நிறம், அதனது வெளிமேற்பரப்பிலிருந்து ஏதேனும் ஒளித்தெறிப்பு எதுவும் இன்றி, சுலபமாக பார்க்கக்கூடியதாக தொண்ணூறு சதவீதம் தனியொரு நிறத்தில் இருத்தல் வேண்டும்.

7. மோட்டார் சைக்கிள் ஒன்றை ஓடுகின்ற ஆளொருவரினால் அணியப்படும் அல்லது பயன்படுத்தப்படும் பாதுகாப்பான தலைக்கவசம் ஒவ்வொன்றும் இலங்கைத் தராதரம் 517: 1994 என்பதற்கு அல்லது காலத்திற்குக்காலம் பாதுகாப்பான தலைக்கவசங்களுக்கு ஏற்புடையற்பாலதாக இருக்கக்கூடியதான அத்தகைய தராதரங்களுடன் இசைந்தொழுகுதல் வேண்டும்.

8. (1) ஆளெவரும் மோட்டார் சைக்கிள் பந்தய ஓட்டத்தில் மோட்டார் சைக்கிளை ஓடுவதைத்தவிர, ஏதேனும் வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றை ஓடுகின்ற நோக்கத்திற்காக, இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுடன் இசைந்தொழுகாத ஏதேனும் தலைக்கவசத்தை பயன்படுத்துதலோ விற்பனை செய்தலோ அல்லது விற்பனை செய்வதற்கு முனைதலோ ஆகாது.

(2) மோட்டார் சைக்கிள் பந்தய ஓட்டம் ஒன்றிற்காக மோட்டார் சைக்கிளை ஓடுகின்ற ஆளொருவர் அவசியமான பாதுகாப்பான சக்கர இயக்க மாற்றுக்கருவி (கியர்) இன்றி ஓட்டத்தில் பங்குகொள்ளுதல் ஆகாது.

9. ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்றோராம் ஆண்டு சனவரி மாதம் 11 ஆந் திகதிய 644/26 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1990 ஆம் ஆண்டின் மோட்டார் வாகன (அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு தலைக்கவசங்கள்) ஒழுங்குவிதிகள் இத்தால் ஒழிக்கப்படுகின்றது.

10. இவ்வொழுங்குவிதிகளில் சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலன்றி :-

"நாடிப்பட்டி" என்பது, அணிபவருடைய நாடிக்கு அல்லது கீழ் தாடைக்கு கீழ் செல்லுகின்றதும் மோதுதலில் அணிபவருடைய தலையில் தலைக்கவசத்தை வைத்திருப்பதற்கு உட்கருதப்படுகின்றதுமான 20 மி. மீ. அகலத்திற்கு குறையாத ஒரு பட்டி எனப் பொருள்படும் ; அத்துடன்

"கவசமுகத்தகடு" என்பது, கண்களுக்கு மேலே நீடிக்கின்றதும் அணிபவரின் முகத்தின் பாகத்தை அல்லது முகம் முழுவதையும் மூடுகின்றதுமான ஒரு ஒளிபுகவிடுகின்ற பாதுகாப்புத் திரை எனப் பொருள்படும்.

3- 399

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.